1969 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு திரு. ஹாண்டே அவர்களது கேள்விக்குச் சொன்ன பதிலையே தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களும் உதவி புரிந்தால் நல்ல முறையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. பி. எஸ். மணி : வீடுகளில் பிடிக்கப்பட்ட கேஸ்களை விட தெருக்களில் பிடிக்கப்பட்ட கேஸ்கள் தான் அதிகம். வீடுகள் என்கிறபோது கூட ஏழை எளியவர்களின் வீடுகளில் தான் பிடித்திருக்கிறார்கள். பணக்காரர்கள் ** போன்ற இடங்களில் சூதாட்டம் ஆடுகின்றதை போலீஸ்காரர்கள் தடுப்பதில்லை. அரசாங்கம் சூதாட்டத்தைத் தவிர்ப்பதற்காகவே என்று ஸ்பெஷல் ஸ்க்வாட் போட்டு பெரிய பெரிய பங்களாக்களிலும் நடை பெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் கேள்வி போடுகிறபோது ** என்பதாக பெயர்சுட்டிக் குறிப்பிடுவது முறை அல்ல. பொதுவாக க்ளப் என்று சொன்னால் போதும். அவர் சுட்டிய பெயர்மட்டும் நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கப் படும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒவ்வொரு குற்றத்தையும் கண்டுபிடிப்பதற்கு என்று தனித்தனியாக போலீஸ் பிரிவை ஏற்படுத்த முடியாது. எங்கெங்கு சூதாட்டம் நடைபெறுகிறது என்கிற விவரம் தெரிகிறபோது உறுப்பினர்கள் அதை எழுதினால் உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். பொதுமக்களும் குற்றவாளிகளைப் பிடித்துக்கொடுப்பதில் போலீஸ் அதிகாரிகளுக்குத் துணை புரிய வேண்டும்.

Inam Estates Act

* 94 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether any representation has been received by the Government about the 10th March 1968. on the question of the amendment made to the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 36 of 1963); and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(ஆ) நில உடைமையாளர்கள் நேர்முகமாக உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளாரா எனச் சோதித்துப் பார்த்த பின்னர் அவர்களுக்குப் பட்டா வழங்குவதைப் போன்று சமய நிறுவனங்களுக்கும் அம்முறையை பின்பற்றவேண்டுமென்று அதில் முறை யிடப்பட்டுள்ளது. இதற்காகத் தமிழ்நாடு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரி மாற்றச்) சட்டம் தக்க முறையில் திருத்தப்பட வேண்டும்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : மெட்ராஸ் இனாம் எஸ்டேட் ஆக்டினுடைய நோக்கத்திற்கு எதிரிடையாக அதன் பயனை விவசாயிகள் பெற முடியாதபடி அமெண்ட்மெண்ட் இருப்பதால், இதை நீக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இந்தமாதிரியான நிலைமை வந்ததற்குக் காரணத்தைப் பார்க்கவேண்டும்.

According to the original provision in section 9 of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, the landholder of an inam estate has to prove the cultivation test for a period of 3 years within a continuous period of 12 years before 1st April 1960, if he has to get a ryotwari patta in respect of a private land. On repeated representations from several religious institutions and on the recommendation of the Board of Revenue, the Government amended this section so that religious institutions can get patta without proof of personal cultivation test, This amending legislation was undertaken in consultation with the Government of India also. The main reason for undertaking this amending legislation was that due to certain administrative instructions issued by the Hindu Religious and Charitable Endowments Department, religious institutions were prevented from resorting to personal cultivation. The present representation is that the original provision that the religious institutions also should prove personal cultivation test should be restored, as otherwise there will be a discrimination between the ryots in inam estates owned by the religious institutions and inam estates owned by other landholders. On a suggestion from the Hon. Minister for Law, it is being re-examined.

மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

*95 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : மதுராந்தகம் வட்டத்தை செய்யூர் உப வட்டம் என்று பிரிக்கிற வகையில் 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஆய்வு செய்யப்பட்டது என்று பேசப்படுகிறதே, அது உண்மைதானா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.